**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 372/2021 c/w 135/2025

எ.ம.சா1 முத்துக்குமார்

| | |
|---|---|
| Name | : முத்துக்குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :28.01.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தாக்கல்

நான் 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 04.06.2021ம் தேதியில் எங்களது நிறுவன களப்பணியாளர் அறித்துள்ள அறிக்கை அலுவலக நகல் எ.ம.சா.ஆ1

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். எங்களது நிறுவனம் மனுதாரர்களுக்கு 50% இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ3, 4 ஆவணங்களின் அடிப்படையில் எங்களது காப்பீடு நிறுவனம் 50% இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். காப்பீடு உள்ள வாகனம் காப்பீடு இல்லாத வாகனத்தின் உரிமையாளரிடம் இருந்து வசூல் செய்து கொள்ள வேண்டும் என்றும், காப்பீடு செய்த வாகனம் இழப்பீட்டை வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.2 பாஸ்கர் என்பவர் ம.சா.1யிடம் ஒட்டுனராக

பணிபுரிந்தார் என்றால் சரியல்ல. ம.சா.2 பாஸ்கருக்கு தொழிலாளர் இழப்பீடு நீதிமன்றம் எங்களது காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காயம் அடைந்த நபர் தொழிலாளர் நல நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்பாயத்திலோ மனு தாக்கல் செய்து இழப்பீடு பெற்று கொள்ளலாம் என்றால் அது பற்றி தெரியாது. ம.சா.1யிடம் ம.சா2 பாஸ்கர் ஓட்டுனர் வேலை பார்த்தார் என்பதை அவரே ஒப்புக்கொண்டார் என்றால் அது தவறாகும். முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் ஏற்று கொள்ள இயலாது என்றும் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியம் ஏற்கதக்கது என்றாலும் சரியல்ல. காப்பீடானது முழு காப்பீடு என்றால் சரிதான். காப்பீடானது ஓட்டுனருக்கும், உரிமையாளருக்கும் சேர்த்து தனிதனியாக ரூ.50/– வசூலிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காப்பீடானது 3ம் நபருக்கு சேர்த்து செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா2 பாஸ்கர் காப்பீட்டை பொறுத்தவரை 3ம் நபர் என்றால் சரியல்ல. அவர் அந்த காரின் பயணம் செய்த பயணி ஆவார். எ.ம.சா.ஆ1 களப்பணியாளர் அறிக்கை எங்களது நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட நபரின் அறிக்கை என்றால் சரிதான். எம.சா.ஆ1 ஆவணமானது எங்களது நிறுவனத்தின் நபரால் தயார் செய்யப்பட்டுள்ளதால் அது ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. மனுதாரர் பாஸ்கருக்கு எங்களது காப்பீடு நிறுவனம் 50% இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்தில் இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதியுள்ளது என்றால் சரிதான். என் நிறுவனத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.